[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 31

*(5) மின் தொடரமைப்பை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், மின் பகிர்மானக் கட்டமைப்பைச் செம்மைப்படுத்தினால்தான் நுகர்வோருக்குச் சீரான மின்சாரம் கிடைக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, இந்த நிதியாண்டில் 28,000 மின் விநியோக மாற்றிகள் 660 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்படும்.*

*(6) எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த மூன்று ஆண்டுகளில் 30 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக நடப்பு நிதியாண்டில் மேலும் 10 இலட்சம் மின் இணைப்புகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மக்கள் உயர்வுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-40*

## (இ) ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி மற்றும் விடுதி வசதிகளை மேம்படுத்துதல், ஆசிரியர் தேர்வுக்குப் பயிற்சி அளித்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகரீதியாகப் பின்தங்கியுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், சமூகப் பொருளாதார முன்னேற்றம் பெறுவதற்கு அடிப்படையாக விளங்குவது கல்வி என்பதால், அவர்கள் கல்வியில் வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான அனைத்துச் சலுகைகளையும், உகந்த சூழலையும் உருவாக்கும் வண்ணம் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு தீட்டி, செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்:*

*(1) 10 மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்கள் தொழில்நுட்பக் கல்வி பயில ஏதுவாக, கடலூர் மாவட்டம், நந்தனார் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி வளாகத்திலும்,*

2014 ஜூலை 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி வளாகத்திலும் இரு தொழில்நுட்பக் கல்லூரிகள் 24 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(2)* 10 ஆம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்கள் தொழிற்பயிற்சி பெற ஏதுவாக, திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் 10 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(3)* ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குச் சரிவிகித உணவுப் பட்டியலில் உள்ளபடி உணவு வழங்கப்பட்டு வருகிறது. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகள் உரிய நேரத்தில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் செல்லும் வகையிலும், ஒரே நேரத்தில் சூடான உணவு தயாரித்துப் பரிமாற வழிவகை செய்யும் வகையிலும், 150 மாணாக்கர்களுக்குமேல் தங்கியுள்ள 200 விடுதிகளுக்கு 8 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் நீராவி கொதிகலன்கள், அதாவது Electric Steam Boilers வாங்கி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(4)* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு சூடாகவும், சுவையாகவும் இட்லி தயாரித்து வழங்கும் வகையில், 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் 1,577 நீராவி இட்லி குக்கர்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(5)* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கு பாய் மற்றும் போர்வை வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் 4 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் உறையுடன்கூடிய தலையணை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 31

*(6)* மலைப் பகுதிகளிலுள்ள பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மழைக் காலங்களில் பள்ளிகளுக்கு நனையாமல் செல்ல ஏதுவாக, அனைவருக்கும் *2* கோடி ரூபாய் செலவில் தலா ஒரு ரெயின் கோட்டும் *(மேசையைத் தட்டும் ஒலி)* குளிர் காலங்களில் மாணவ, மாணவியரின் உடல் நலத்தைப் பாதுகாக்கும் வகையில், அனைவருக்கும் *1* கோடியே *8* இலட்சம் ரூபாய் செலவில் தலா ஒரு கம்பளிச் சட்டையும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(7)* தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதால், *2014-2015* ஆம் கல்வி ஆண்டில், பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு விடுதிகள், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய எட்டு மாவட்டங்களில் தலா ஒன்று வீதம் *8* விடுதிகள் என மொத்தம் *10* கல்லூரி விடுதிகள் *2* கோடியே *60* இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-45*

*(8)* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளில், பயன்பாட்டில் உள்ள குழல் விளக்கு, மின் விசிறி மற்றும் தண்ணீர்க் குழாய் ஆகியவற்றினைப் பராமரிக்க ஒரு விடுதிக்கு ஆண்டொன்றுக்கு *15,000/-* ரூபாய் வீதம் *1,647* விடுதிகளுக்கு *2* கோடியே *47* இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(9)* B.Ed. படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள *906* பழங்குடியினப் பட்டதாரிகளுக்கு, அவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற ஏதுவாக, *66* இலட்சம் ரூபாய் செலவில், மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் வாயிலாகவும், ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற *500* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் B.Ed. பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்ற *500* ஆதி திராவிடர்களுக்கு, ஆசிரியர்

2014 ஜூலை 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தகுதித் தேர்வில் தகுதி பெற வழிவகை செய்யும்வகையில், 55 இலட்சம் ரூபாய் செலவில் தனியார் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாகவும் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் கல்வியில் தேர்ச்சிப் பெற்று, அதன்மூலம் சமூகப் பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் —தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? யாராவது ஒருவர் கேளுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களது முன்னறிவிப்பு எனது ஆய்வில் இருக்கிறது, நான் அதைப் பார்வையிட்டு, பிறகு சொல்கிறேன். (குறுக்கீடு) எனது ஆய்வில் இருக்கிறது, துறையின் பதிலுக்காக அனுப்பி இருக்கிறேன். பதில் வந்தவுடன் அதை எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அது எனது ஆய்வில் இருக்கிறது, துறையின் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்தது எனது ஆய்வில் இருக்கிறது, துறையின் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) துறையிடமிருந்து பதில் வந்தவுடன் பின்னர் எடுத்துக்கொள்கிறேன், நீங்கள் உட்காருங்கள்.